RECEIVED 1979-6-14 PERIODICALS DIVISION UNIVERSITY ... LIBRARY


வேலையில்லையா?
போதிய வருவாய் இல்லையா?
வழிகாட்டுகின்றோம்!
நியூ கேம்பிறிட்ஜ் டியூடோறியல் இன்ஸ்ரிரியூட்
[திருநெல்வேலிச் சந்தி]
1. Transistor-Radio & Electronic (With Practical)
2. City & Guilds Telecommunication Technicians Exam
3. London (A/L) ஆகிய வகுப்புகள் 19-06-79ல் ஆரம்பமாகின்றன.
4. G. C. E. உயர்தரம் [வர்த்தகம், விஞ்ஞானம்] புதிய மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.



★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு
The EELANADU

Registered as a Newspaper at the General PostOffice Sri Lanka under No QB/8945/78

மலர்: 21 வைகாசி: 31 றஜப்: 18 இதழ்: 115

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 14-6-79



குறைந்த செலவு நீடித்த உழைப்பு
இதோ மலிவு விலையில்
SUMITOMO
டயர் டியூப்
சகல சைஸ்களிலும் கிடைக்கும்.
525 X 16 சைஸ் ரூ 525/- மட்டுமே
விநியோகஸ்தர்கள்:
லீடன் ரேடர்ஸ்
''சேகரம் கட்டிடம்''
188/3, ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.


# பெற்றோலியப் பொருட்கள் விலையேற்றம்!

## மண்ணெண்ணெய் விலையில் மாற்றமில்லை

### ஜூலைமாதம் முதல் சனி, ஞாயிறுகளில் பெற்றோல் நிலையங்கள் மூடப்படும்

(கொழும்பு)

பெற்றோலியப்பொருட்களின் விலைகள்யாவும் நேற்றுநள்ளிரவுமுதல் அதிகரிக்கப்பட்டுள்ளது. ஆனால் மண்ணெண்ணெயின் விலைமாத்திரம் அதிகரிக்கப்படவில்லை. பெற்றோலியப் பொருட்களை சிக்கனப்படுத்தும் விதத்தில் சனி, ஞாயிறு நாட்களில் பெற்றோல் நிலையங்களை மூடிவிடுவதற்கும் அரசு முடிவு செய்துள்ளது.

[illegible] சுப்பரின் விலை [illegible] கலன் 30 ரூபாயாகவும், லீற்றர் ஒன்று ரூபா 6-60 சதமாகவும் அதிகரிக்கப்பட்டது. லங்கா பெற்றோல் கலன் 28 ரூபாயாகவும், லீற்றர் ஒன்று ரூபா 6-35 சதமாக விற்கப்படும். ஆட்டோ டீசல் கலன் ஒன்று ரூபா 10-50 சதம். லீற்றர் ஒன்று ரூபா 2 30 சதம். ஹெவி டீசல் கலன் ஒன்று ரூபா 10-30 சதம்.

எண்ணை இறக்குமதியினால் அரசுக்குப் பெருமளவில் நஷ்டம் ஏற்பட்டுவருவதினாலேயே விலைகளை அதிகரிக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும், இது தவிர்க்கமுடியாததாகவும் அமைச்சர் தெரிவித்தார். வருடமொன்றுக்கு 9 கோடி 80 லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்படுவதாக அவர் கூறினார்.

கொழும்பில் 25 மைல் சுற்றுடலில் மாத்திரமே இந்த விலை நிர்ணயம் செய்யப்படும். ஏனைய பகுதிகளில் பெற்றோல் நிலையங்களின் சுற்றுவட்டத்திற்கேற்ப விலைகள் நிர்ணயிக்கப்படும்.

(6-ம் பக்கம் பார்க்க)

---

தமிழ் ஈழக்கோரிக்கைக்கு எதிர்ப்பு

## 1000 பிக்குகளின் மகாநாடு கொழும்பில் நடைபெறும்

[கொழும்பு]

தமிழர் விடுதலைக் கூட்டணியினதும், அதுபோன்ற வேறு ஸ்தாபனங்களினதும் நாட்டைப் பிரிக்கும் தமிழ் ஈழக் கோரிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கவும், இந்தக் கோரிக்கையினால் ஏற்படக்கூடிய விளைவுகள் பற்றி ஆராய்வதற்குமான ஒரு மகாநாட்டை ஜூலை மாத இறுதியில் பௌத்த பிக்குகள் நடத்தவிருக்கிறார்கள்.

மூன்று நிக்காயாக்களையும் சேர்ந்த 1000 பிக்குகள் இந்த மகாநாட்டில் கலந்துகொள்வார்கள்.

இம்மகாநாட்டில் கலந்துகொள்ளும்படி அஸ்கிரிய மல்வத்தைப் பீடாதிபதிகளுக்கும் அழைப்பு விடப்படுமென்று தெரிகிறது.

கொழும்பு வித்தியோதயப் பல்கலைக்கழகத்தின் ஸ்ரீசுமங்கல மண்டபத்தில் இந்த மகாநாடு நடைபெறும். (ம)

---

செங்கலடி வங்கிக் கொள்ளை,

## "பரமதேவா துப்பாக்கியைக் காட்டி காசாளரிடம் பணப்பையை பறித்தார்"

### கான்ஸ்டபிள் அபயரத்ன சாட்சியம்

[கொழும்பு]

வங்கி காசாளர் கணேசலிங்கம், சைக்கிளில் பணத்தை கொண்டுசென்றபோது, ஏறாவூர் சாந்தி படமாளிகைக்கு முன்னால் எதிரி பரமதேவா, துப்பாக்கியை காட்டி சயிக்கிளில் தள்ளி பணப்பையை எடுத்தார்.

செங்கலடி வங்கி கொள்ளை வழக்கில் சாட்சியமளித்த பொலிஸ் கொன்ஸ்டபிள் அபயரத்ன கூறினார்.

கொழும்புமேல் நீதிமன்றத்தில் நீதிபதி திரு. சில்வா முன்னிலையில் நான்காவது தினமாக நேற்று இவ்வழக்கு நடந்தது.

பொலிஸ் கான்ஸ்டபிள் அபயரத்ன மேலும் கூறியதாவது: சம்பவம் நடந்ததினம் சார்ஜன்ட் ஹசன் ஒருகட்டளை வழங்கினார். அச்சமயம் பொறுப்பதிகாரியாக திரு லக்ஷ்மன் சில்வா கடமையாற்றினார். கான்ஸ்டபிள் ராமநாயக்காவிற்கும் அக்கட்டளை வந்திருந்தது.

அன்று காலை 10 மணிக்கு கொள்ளை நடக்கவிருப்பதாக அக்கட்டளையில் இருந்தது. நானும், ராமநாயக்கவும் சயிக்கிளில், செங்கலடிவங்கிக்கு போய் விசாரித்தோம்

(6-ம் பக்கம் பார்க்க)

---

## 4 இளைஞர்கள் வடபகுதிக் கொள்ளைதொடர்பாகக் கைது

### தாலிக்கொடி, கைக்கடிகாரம் மீட்பு

[யாழ்ப்பாணம்]

பயங்கரவாதச் செயல்களில் ஈடுபட்டதாகக் கருதப்படும் நான்கு இளைஞர்களைப் பொலிசார் கைதுசெய்துள்ளனர்.

வெளியிடங்களில் கைது செய்யப்பட்ட இந்நால்வரும் நேற்று யாழ்ப்பாணம் கொண்டுவரப்பட்டனர்.

இவ்விளைஞர்களால் கொள்ளையடிக்கப்பட்டதாகக் கருதப்படும் 25 ஆயிரம் ரூபா பெறுமதியான தாலிக்கொடி ஒன்றும், கைக்கடிகாரம் ஒன்றும் யாழ்ப்பாணப் பொலிசாரால் கல்வியங்காட்டிலுள்ள வீடு ஒன்றின் பின்னால் நிலத்தில் புதைத்துவைக்கப்பட்ட நிலையில் கண்டெடுக்கப்பட்டன.

கொள்ளைகளுக்குப் பாவிக்கப்பட்டதாகக் கருதப்படும் உள்ளூர்த் துப்பாக்கி ஒன்றையும், ஏ 40 கார் ஒன்றையும் பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

யாழ்ப்பாணப் பொலிசாரால் முல்லைத்தீவுப் பொலி

[6ம் பக்கம் பார்க்க]

---

## சிங்கப்பூர் பிரயாணியிடம்

சென்னை, ஜூன் 13

சிங்கப்பூரிலிருந்து விமான மூலம் சென்னையை வந்தடைந்த சிங்கப்பூர்ப் பிரயாணி ஒருவரிடமிருந்து 1 லட்சத்து 57 ஆயிரம் ரூபா பெறுமதியான 200 கைக்கடிகாரங்களும் 100 கல்குலேட்டர்களும் சுங்க அதிகாரிகளினால் கைப்பற்றப்பட்டது.

இவரிடமிருந்து 1,000 இந்திய ரூபாய் ஒன்றின் பின்னால் கைப்பற்றப்பட்டன. பிரயாணி தடுத்து வைக்கப்பட்டுள்ளார். [இ]

---

# சாதியின் பெயரால் நடக்கும் அநீதிகளை உடன் நிறுத்துக!

## 'அமிர்' கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

''யாழ். குடாநாட்டில் பொதுவாகவும், குறிக்கப்பட்ட ஒருசில கிராமங்களில் விசேஷமாகவும் சாதியின் பெயரால் நடைபெறும் கலவரங்கள் யாவும் உடனடியாக நிறுத்தப்படவேண்டும். சாதியின் பெயரால் நடைபெறும் அநியாயங்கள் யாவும் நீக்கப்படவேண்டும்.''

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலதிபரும், எதிர்க்கட்சித் தலைவருமான திரு. அ. அமிர்தலிங்கம், கைதடியில் இடம்பெற்ற பிரச்னைகள் குறித்தும், சாவகச்சேரி அறவழிப் போராட்டக் குழுவினது கறுப்புப்பட்டி, உண்ணாவிரதப் போராட்டம் குறித்தும் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

''சமூக ஒற்றுமையை அன்பின் வழியிலேயே நிரந்தரமாக நிலைநாட்டமுடியும். எனவே சாவகச்சேரித் தொகுதியின் அறவழிப் போராட்டக்குழு நாளை வெள்ளிக்கிழமை நடத்தும் கறுப்புப் பட்டிப் போராட்டத்திலும்,

[6-ம் பக்கம் பார்க்க]

---


4-6-79ல் இடம்பெற இருந்த நிகழ்ச்சி மீண்டும் 15-6-79ல் நடைபெறும்
தென்னிந்திய திரைப்படப் பாடகர்கள் T. L. மகாராஜன் (திருச்சி லோகநாதனின் புதல்வன்)
T. M. S. செல்வகுமார் (T. M. சௌந்தரராஜன் அவர்களின் புதல்வன்) லதா ருக்மணிதேவி ஆகியோர் கலந்துகொள்ளும்
''இசைகானம்''
15-06-79 சுதுமலை அம்மன்கோவில் முன்றலில்
இரவு 9 மணி முதல் அதிகாலைவரை இடம்பெறும்.
12-ம் திருவிழா உபயகாரர்
(2755)

## வரி விளம்பரம்

### தேவை

லண்டன் பிரமன் பரீட்சைக்கு ஆங்கிலச் சுருக்கெழுத்துப் படிப்பிப்பதற்கு நன்கு அனுபவமுள்ள முழுநேர ஆசிரியை உடனே தேவை விண்ணப்பிக்கவும்; ஸ்ரீ மீனாட்சி வர்த்தகக் கல்லூரி, 57, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் 2740

1979-ல் முதல் பதிவு செய்த 135மாசேபேர்குஸன் டிராக்ரர் சங்கரப்பிள்ளை, பெரியகுளம், மாங்குளம். 2745

### விற்பனைக்கு

திருத்தியமைக்கப்பட்ட ஹொண்டா 350 மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு சச்சிதானந்தம், புங்கன்குளம் சந்திக்கு அருகாமையில் 2744

### WANTED

"Wanted an Audit Clerk Trainee with full knowledge in Book-keeping & Accounts Preference will be given for those living within the limits of the Municipality Apply with two recent testimonials stating salary required". Advt. No. 2749, C/o Eelanadu Ltd, Jaffna. 2749

## மகாஜனா விளையாட்டுப் போட்டி

[யாழ்ப்பாணம்]

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி வருடாந்த இல்ல மெய்வல்லுனர் சுவட்டு மைதானப் போட்டி நாளை வெள்ளிக்கிழமை மாலை, கல்லூரி விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

வைபவத்திற்கு முதன்மை விருந்தினராக சுன்னாகம் பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி திரு. பொ. சுகுணேந்திரன் கலந்துகொள்வார். பரிசில்களை மேலதிக சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி திருமதி கு. பொன்னம்பலம் வழங்குவார். [கெ]

## யாருடையது?

இலங்கை வங்கி சேமிப்பு வைப்புக்கணக்குப் புத்தகம் ஒன்று கொக்குவிலைச் சேர்ந்த திரு எம்.சிறீராஜமகேந்திரன் என்பவரால் வின்சர் தியேட்டர் சந்தியில் கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அத்தாட்சி காட்டிப் பெற்றுக்கொள்ளலாம். [கு]

## சங்காபிஷேகம்

[யாழ்ப்பாணம்]

நீர்வேலி ஸ்ரீ அரசகேசரிப் பிள்ளையார் கோவில் சங்காபிஷேகமும் மணவாளக்கோலமும் இன்று காலை நடைபெறவுள்ளது. [கு]

## சென்.ஜோன்ஸ் பழைய மாணவர் சங்கம்

[அரியாலை]

கடந்த எழுபத்தைந்து வருடங்களாக கல்லூரியின் வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாக உழைத்துவந்த பழைய மாணவர் சங்கம் கல்லூரியின் முன்னேற்றத்திற்கு தன்னாலான சேவையைத் தொடர்ந்தும் செய்ய வேண்டும் 1960ம் ஆண்டு மார்கழி மாதம் தொடக்கம் கல்லூரி தனித்து இயங்க வேண்டுமென்று முடிவுசெய்ததுடன் நில்லாது இன்றுவரை அதன் வளர்ச்சியில் தனது பங்கைச் செலுத்தியுள்ளது"

இவ்வாறு யாழ் பரியோவான் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் 75வது வருடாந்த மகாநாட்டிற்குத் தலைமைவகித்துப் பேசுகையில் பழைய மாணவர் சங்கத்தலைவர் சட்டத்தரணி திரு ஜிம்மி இராசரத்தினம் கூறினார்

அவர் தொடர்ந்து பேசுகையில், 4 லட்சம் ரூபா பெறுமதியுள்ள ஒன்றரை ஏக்கர் காணியை கல்லூரியின் விவசாயப்பண்ணை அமைப்பதற்கு வழங்கிய பழைய மாணவர்களின் சிறப்பான செயலை மறந்துவிடமுடியாது என்று கூறினார்

புதுவருட நிர்வாகிகள் வருமாறு: தலைவர்: நீதிபதி ஜே டி ஆசீர்வாதம், உபதலைவர்கள் திருவாளர்கள ஜே ரி செல்லையா, எம் கணேசசுந்தரம், டி பி சுந்தரம்பிள்ளை, வைத்திய கலாநிதி வி ஏ பெஞ்மினுல், செயலாளர்: திரு ஸ்ரான்லி ஆர்னல்ட், உப செயலாளர்: திரு வி துரைச்சாமி, பொருளாளர்: திரு எஸ் பஞ்சலிங்கம், 20 நிர்வாக சபை உறுப்பினர்களும் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர். (அ)

## வெலிசறை பால்மா தொழிற்சாலை தீ விபத்துக்கு நாசவேலைகாரணம்

### சி. ஐ. டி. அறிக்கை

[கொழும்பு]

வெலிசறை பால்மாதொழிற்சாலையில் அண்மையிலேற்பட்ட தீவிபத்துக்கு நாசவேலையே காரணமென்று சி ஐ டி பொலிசார் தெரிவித்துள்ளனர்.

தீவிபத்துகுறித்து விசாரணை நடத்திய சி ஐ டி பொலிசார் பாதுகாப்பு அமைச்சுக்குச் சமர்ப்பித்த அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

தீ விபத்து ஏற்படுவதற்கு முன்னர் தொழிற்சாலையில் 'மின் ஒழுக்கு' இருந்ததென்றும் இதன் மூலமே தீ ஏற்பட்டதென்றும் தெரிவிக்கப்பட்டது. (இ)


யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

**அங்குரார்ப்பணக் கூட்டம்**

16-6-79 சனிக்கிழமை காலை 9 மணி
இடம்: கல்லூரிப் பிரார்த்தனை மண்டபம்
மேற்படி கூட்டத்துக்கு பெற்றோர்கள், பழைய மாணவர்கள், பாடசாலை நலன்விரும்பிகள் அனைவரும் வருகை தந்து பூரண ஒத்துழைப்பு நல்குக.

பொ. ச குமாரசுவாமி,
அதிபர்

2750



**முக்கிய அறிவித்தல்**

இல்லத்தரசிகளே தொழில் அதிபர்களே
பாற்பண்ணையாளர்களே

★ KRAFT CHEESE ★ CHEDDAR (பாற்கட்டி)

போன்ற Cheese வகைகளை வீட்டிலோ அன்றி தொழில் முறையிலோ எவ்வாறு தயாரிப்பது என்பது பற்றி கொழும்பில் அநேகரைப் பயிற்றுவித்த நிபுணர் தற்பொழுது யாழ்ப்பாணத்துக்குவிஜயம் செய்துள்ளார். சர்வதேச தரத்திற்கொப்ப Cheese வகைகளை தயாரிக்கும் முறையை செயல்முறை விளக்கம் மூலமும், குறிப்புக்கள் மூலமும் பயிற்றுவிப்பார். சனிக்கிழமைகளில் வகுப்புக்கள் நடத்தப்படும். கடிதப் போக்குவரத்தை தவிர்க்கவும். நேரில் சந்தித்து வகுப்புக்களை ஒழுங்கு செய்துகொள்ள வேண்டிய முகவரி:

15-6-79 காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை
16-6-79 காலை 9 மணி முதல் பகல் 12 மணி வரை

**கலாநிலைய அச்சகம்,**
303, (533) K. K. S. ரோட், யாழ்ப்பாணம்.

27[illegible]3



"பழம் நீ" புதுமனைப் புகுவிழா

**நன்றி நவிலல்**

எமது புதுமனைப்புகுவிழாவிற்கு வருகை தந்து சிறப்பித்து அன்பளிப்புகள், பரிசில்கள் வழங்கியவர்களுக்கும், வாழ்த்துச்செய்திகள் அனுப்பியவர்க்கும் எங்கள் உள்ளம் கவர்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம்.

இவ்வண்ணம்
நா. தியாகராசா குடும்பத்தினர்,
இ போ ச. பிரதேச முகாமையாளர்,
வடபிராந்தியம்.

126, அரசடி வீதி,
கந்தர்மடம் சந்தி,
யாழ்ப்பாணம்.

2746


## தஞ்சையில் இந்திராகாந்தி

சென்னை, ஜூன். 13

தஞ்சாவூர் இடைத்தேர்தலில் போட்டியிடும் இந்திரா காங்கிரஸ் வேட்பாளருக்கு ஆதரவாக பிரசாரம் செய்யும் பொருட்டு முன்னாள் பிரதமர் திருமதி இந்திராகாந்தி தஞ்சாவூர் வந்துள்ளார்.

திருமதி காந்தியுடன் தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் திரு. ஆர். வி சுவாமிநாதனும் சென்னையிலிருந்து காரில் தஞ்சாவூர் வந்தனர். வழியில் திருச்சியில் தங்கி நின்றபின்னரே இவர்கள் தஞ்சாவூர் வந்தனர். [இ]


**5-வது நினைவாஞ்சலி**



ஜோதினி நடராஜா,

தோற்றம் — மறைவு
1959-06-20 1974-06-14

எங்கள் இதயத்தின் அணையாச்சுடர் விளக்கே! உங்கள் ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

அப்பா, அம்மா,
சகோதரிகள்,
வினோதன், அண்ணமார்,
உற்றார் உறவினர்.
55, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.

2728



**மரண நன்றி நவிலல்**

அ. அருங்குணநந்தன்



15-05-79ல் அகால மரணமடைந்த செல்வன் அருணசலம் அருங்குணநந்தன் அவர்களின் மரணச்சடங்குகளுக்கு இன்று வரை வருகை தந்தும், மலர் வளையங்கள், அனுதாபச் செய்திகள் அனுப்பியும், பல வழிகளில் உதவிகள் புரிந்தும் ஆறுதலளித்த நண்பர்கள், உறவினர்கள் அனைவருக்கும் எங்கள் மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம தனித்தனியாக நன்றி கூற இயலாமைக்கு வருந்துகிறோம்

பெற்றோரும், சகோதரர்களும்,
இராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம்.

2733



**ஜெயகாந்தன் நூல்கள்**

இன்றைய தமிழ் எழுத்தாளர்களிடையே இவர் ஒரு சரித்திரம். ஒரு சகாப்தம். எங்கெங்கு இதயங்கள் குமுறுகின்றனவோ அங்கங்கெல்லாம் சென்று அந்தரங்க சுத்தியுடன் அவர்களுடைய உணர்ச்சிகளைப் பிரதிபலித்து நம்மையும் குமுறச் செய்பவர் ஜெயகாந்தன்.

நூலகங்களிலிருந்தோ அன்றி நண்பர்களிடமிருந்தோ படித்துவிட்டு திரும்ப கொடுக்கக் கூடியவை அல்ல இவருடைய நூல்கள். ஏனெனில் அவர் படைக்கும் ஒவ்வொன்றும் ஒவ்வொரு காவியம் — தலைமுறை தலைமுறையாகப் பாதுகாக்கப்பட வேண்டியவை.

ஆனால் — இந்தியாவிலிருந்து அவை இறக்குமதியாவதினால் இரட்டிப்பு விலை கொடுக்க இயலாத உங்களது குறையை அவருக்கு எடுத்துச் சொன்னோம். இலங்கையில் அவருடைய நூல்களை அச்சிட உரிமை தந்து உங்களது மனத்தை நிறைவு செய்கிறார் ஜெயகாந்தன்.

இந்த வரிசையில் வெளியாகியுள்ளது—"ஒரு குடும்பத்தில் நடக்கிறது" என்னும் முழுநாவல், சாதாரணமாக இறக்குமதியாகும்போது ரூபா 5/-க்கு மேல் செலவாகும். இந்நூல் இலங்கையில் தரமாக, அழகாக அச்சிட்டு ரூபா 3/95க்கு உங்களுக்குக் கிடைக்கவிருக்கிறது. தொடர்ந்து இவருடைய நூல்கள் யாவும் இலங்கையில் அச்சாகி எளிய விலையில் வெளிவரும் நாட்டின் அந்நிய செலாவணியை மீதப்படுத்தி, உள்ளூர் அச்சுக்கலையை வளர்த்து, ஒர் சிந்தனையாளரின் நூல்களை நீங்கள் படிக்க உதவும் எங்கள் முயற்சிக்கு உங்கள் ஆதரவு என்றும் உண்டு என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

**வியாபாரிகளுக்கு 15 வீதம் கமிஷன் உண்டு.**

தொடர்புகொள்க:

**வேல்முருகன் புத்தகசாலை - கிருஷ்ணா பப்ளிகேஷன்ஸ்**

பருத்தித்துறை வீதி, நல்லூர்.
149, புதுச் செட்டி தெரு, கொழும்பு-13.

2754

## மக்கள் கருத்து

### பொலிசாரின் முன்மாதிரி

யாழ்ப்பாணம் பல்கலைக் கழக மாணவர்களாகிய நாங்கள் சிலர் பல்கலைக்கழகத்தில் விடுதியில்லாததால் வீடொன்றில் வசித்துவருகிறோம். பல்வேறு இடங்களைச் சேர்ந்த மாணவர்கள் ஒன்றாக வந்து குடியேறியுள்ளோம். எமது விடுதியிலிருந்து சுமார் ஆயிரம் ரூபா பெறுமதியான உடுப்புக்கள் (4 நீளக்காற்சட்டையும் 2 சேட்டுகளும்) சிலதினங்களுக்கு முன் இரவு காணாமல் போயின நாம் இவ்விடயம்பற்றிப் பெரிது படுத்தவில்லை. அதற்குக் காரணம் நாம் வேறு கிராமத்திலிருந்துவந்து திருநெல்வேலிக் கிராமத்தில் குடியிருப்பதே. ஆனாலும் ஆனைக்கோட்டைப் பொலிஸ்நிலையத்தைச் சேர்ந்த சில பொலிசாருக்கு விடயத்தைக் கூறியிருந்தோம். அவர்களில் சார்ஜன்ட் தில்லைநாதன், எச் என் ஆரியசேன ஆகிய இரு பொலிசாரும் எமது நிலையைப் புரிந்துகொண்டு மிகத்தீவிரமாகத் தேடுதல் நடாத்தி எமது உடுப்புக்களை திருடியவரிடமிருந்து கைப்பற்றி எம்மிடம் சேர்ப்பித்தார்கள்.

இவ்வாறு எமக்காகத் தாங்களே முழுச் சிரமப்பட்டு அந்தப் பொருட்களை ஒப்படைத்த பொலிசாரைப்போல் சகல பொலிஸ் நிலையங்களிலுமுள்ளவர்கள் நடந்து கொண்டால் நாட்டில் அதிகரித்துவரும் திருட்டுச்சம்பவங்கள் முற்றாகவே ஒழிந்துவிடும்.

க. முகுந்தன்,
பொ. இரத்தினகுமார்
யாழ். பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.

ஃ ஃ ஃ

### வீதியைத் திருத்துவார்களா?

மானிப்பாய்-கைதடி றோட் மிகவும் சீர்கேடாக இருப்பதால் சைக்கிள், கார், லொறி, பஸ் போன்ற வாகனங்கள் செலுத்துபவர்கள் மிகவும் கஷ்டப்படுவதுடன் மேற்கூறிய வாகனங்களின் ரயர்களும் குறுகிய நாட்களில் பழுதடைகிறது. இதனால் மக்கள் மிகவும் சிரமத்துக்குள்ளாகின்றனர். அத்துடன் அந்த வீதியில் செல்வோர் குறுகிய நேரத்தில் செல்லமுடியாமல் இருக்கின்றனர். காங்கேசன்துறையிலிருந்து மா ஏற்றிவரும் லொறிகள் மிகவும் சிரமப்பட்டுத்தான் தாவற்குழியை அடைகின்றன. இவ்வாறே கொழும்புக்குச் செல்லும் லொறிகளும் மிகவும் சிரமப்படுகின்றன.

மக்கள் எல்லோரும் கஷ்டப்படுவதை இந்த றோட் மேற்பார்வை செய்யும் மேலதிகாரிகள் விரும்பமாட்டார்களென நம்புகிறேன். ஆகவே இந்த றோட்டை மிகக் கூடிய சீக்கிரத்தில் திருத்தி மக்களுக்கு உதவுமாறு வேண்டுகிறேன்.

ஐ. இராசரத்தினம்,
கோண்டாவில் கிழக்கு.

### வருடாந்த மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன்கோவில் வருடாந்த மஹோற்சவம் இம்மாதம் 25ம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகி 15தினங்கள் வரை நடைபெறவுள்ளது.

தேர்த்திருவிழா ஜூலை மாதம் 8ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். [செ]

# வேலையற்ற தமிழ் பட்டதாரிகள் யாழ். நகரில் கூடுகின்றனர்

## தம்மை எதிர்நோக்கும் பிரச்னைகள் குறித்து ஆராய்வர்

(யாழ்ப்பாணம்)

இலங்கைப் பல்கலைக்கழகங்களிலிருந்து பட்டம் பெற்று வெளியேறிய தமிழ்ப்பட்டதாரிகள் தம்மை எதிர்நோக்கியுள்ள வேலையில்லாப் பிரச்னை குறித்து யாழ் நகரில் கூடி ஆராய உள்ளனர்

யாழ். ஸ்டான்லி வீதியிலுள்ள வெளிவாரிப்பட்டப் படிப்புகள் நிறுவனத்தில் இம்மாதம் 18ம் காலைதிகதி கூடவுள்ள பட்டதாரிகள் அரசின் அபிவிருத்தித் திட்டங்களில் பட்டதாரிகள் ஆற்றவேண்டிய பங்கு குறித்தும் அதற்கு அரசு மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் ஆராய உள்ளனர்.

1976ம் ஆண்டு வேலையற்ற பட்டதாரிகளின் பிரச்னை முற்றாகத் தீர்த்துவைக்கப்பட்ட போதிலும் அதன் பின்னர் பல்கலைக்கழகங்களிலிருந்து வெளியேறிய பட்டதாரிகளின் வேலையில்லாப் பிரச்னை இன்று வரை தீர்க்கப்படவில்லை. எனவே அவர்கள் தமது எதிர்காலநிலை குறித்து ஆராய வேண்டிய கட்டம் ஏற்பட்டுவிட்டதாக வேலையற்றபட்டதாரி ஒருவர் குறிப்பிட்டார்.

கூட்டத்திற்கான முயற்சிகளை யாழ்ப்பாணம், பேராதனைப் பல்கலைக்கழகங்களிலிருந்து வெளியேறியுள்ள பட்டதாரிகள் துரிதமாக மேற்கொண்டு வருகின்றனர். (கு-இ)

## "எதிர்காலம் சிறுவர்களில் தங்கியுள்ளது"

(யாழ்ப்பாணம்)

பாடசாலையின் வளர்ச்சிக்காகச் செய்யப்படும் செலவு மற்றைய மூலதனங்களிலும் மேலானதாகும் வாழ்வின் பிரகாசமான எதிர்காலம் பாடசாலையிலிருந்து வெளியேறும் ஞானச் செல்வங்களை ஆக்குவதிலேயே தங்கியுள்ளது. பெற்றோர் மட்டுமன்றி நலன்விரும்பிகளும் பாடசாலையின் அபிவிருத்தியில் பங்குகொள்ள வேண்டும்''

இவ்வாறு கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்க அங்குரார்ப்பணக் கூட்டத்தில் அதிபர் திரு மு நல்லையா பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் திரு. மு. நல்லையா உபதலைவர்கள் க இ குமாரசாமி, க மார்க்கண்டு, செயலாளர் திரு தி சுப்பிரமணியம், உபசெயலாளர்: திரு த சிவராசா, பொருளாளர்: க சுப்பிரமணியம், 19 பேர் கொண்ட குழுவும் தெரிவு செய்யப்பட்டது. (கு)

## "விஞ்ஞானரீதியாக நாட்டை வளம்படுத்த வேண்டும்"

(யாழ்ப்பாணம்)

''ஒரு நாட்டிற்கு உயிரைக் கொடுப்பது விவசாயம் என்பதை அடிப்படையாகக் கொண்டு, கமத்தொழிலில் ஈடுபடுபவர்கள் விஞ்ஞானரீதியாக நாட்டை வளம்படுத்திச்செழிப்புற்ற நிலையில் முன்னேறுவதற்கு முயற்சி எடுக்க வளர்ந்தோர் கல்வித்திட்டம் வழிகோலுகிறது.''

இவ்வாறு புத்தூர் நவக்கிரிப் பகுதி கமநலசேவை நிலையத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் வளர்ந்தோர் கல்வி அதிகாரி திரு. சி. எஸ். சுப்பிரமணியம் பேசுகையில் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

''இளைப்பாறி இருப்பவர்கள் ஓய்வு நேரத்தை நல்ல முறையில் பயன்படுத்தி நாட்டுக்குச் சேவை செய்யமட்டுமல்லாமல் தொழில்வாய்ப்பைப் பெறுதவர்கள் தமது தராதரத்திற்கேற்ப தொழிலில் ஈடுபடவும் கற்றறியாதவர்கள் சமூகத்தில் முன்னேறவும் வளர்ந்தோர் கல்வித்திட்டம் வழிவகுக்கும்

''நாடு விவசாயத்துறையில் முன்னேறினால் தான் பொருளாதாரநிலை சீராகும். மண்ணின் தன்மையை முற்றாக ஆராய்ந்து மண்வளத்திற்கும் காலநிலைக்கும் ஏற்றபயிர்களை செய்கை பண்ணவேண்டும். மழைநீரை கடலுக்குள் செல்லாதவாறு தடைசெய்து குளங்களை நிரப்பவேண்டும். விஞ்ஞான அறிவைப் பெற்று வெவ்வேறு பயிர்களுக்கு வெவ்வேறு உரத்தையும், பூச்சிகொல்லிகளையும் உபயோகிக்கக் கற்றுக்கொள்ளவேண்டும்.

''கூட்டுறவு மனப்பான்மை மூலம் வசதியான, பொருத்தமான இடங்களை பண்படுத்தி பயிர்ச்செய்கையில் ஈடுபட்டு போதிய வருமானத்தைத் தேடிக்கொள்ளலாம். இப்படிப் பட்ட அறிவை மக்கள் அனைவரும் இலகுவாகப் பெறக்கூடியதற்கு வழி வளர்ந்தோர் கல்வித்திட்டமே'' (கு)

## கூட்டுறவு ஊழியர் சங்கம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கறுப்புப்பட்டிப் போராட்டத்தின் சகல கூட்டுறவு ஊழியர்களையும் பங்குகொள்ளுமாறு கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்க யாழ்ப்பாணக் கிளை கேட்டுள்ளது.

இதுதொடர்பாக சங்க பொதுச்செயலாளர் திரு.எஸ். மனோகரன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது

யாழ்குடாநாட்டில் பரவலாகவும், கைதடியில் குறிப்பாகவும் இடம்பெற்றுவரும் சாதிக்கொடுமைகளை எதிர்த்து சாத்வீகமுறையில் போராடி தமிழன் நாலாவழிகளாலும் பிரிந்து நிற்காது சகோதரத்துவத்தை பேணவேண்டியது இன்றையநிலையில் மிகவும் முக்கியமானதோர் விடயமாகும். மனிதன் தனது சுயநலத்திற்காக ஏற்படுத்திக்கொண்ட சாதிப் பாகுபாட்டுக்கு முற்றுப்புள்ளி விடும்முகமாக எதிர்வரும் 15ம் திகதியை துக்கதினமாக அனுட்டித்து, கறுப்புப்பட்டிப போராட்டத்தில் அனைவரும்பங்குகொள்ளவேண்டும்.

## 'மஸாச்சுசெட்ஸ்' தீர்மானம் குறித்து 'லங்காதீப' பத்திரிகைக்கு நான் கூறியது இதுதான்

### குமார் விளக்கம்

(கொழும்பு)

இலங்கைத் தமிழ்மக்களின் பிரச்னை குறித்த 'மஸாச்சுசெட்ஸ்' தீர்மானத்தைப் போல் அமெரிக்காவில் உள்ள மற்றும் பல மாநிலங்களில் இருந்து 'ஐக்கியஇலங்கை'க்கு ஆதரவான பல தீர்மானங்களையும் அறிக்கைகளையும் இலங்கை அரசினால் பெறமுடியும் என்றே நான் 'லங்காதீப' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் கூறினேன். 'ஐக்கியஇலங்கைக்கு ஆதரவாக அமெரிக்க மாநிலங்களிடமிருந்து அறிக்கைகளை என்னால் பெறமுடியும் என்று நான் கூறவில்லை.

இவ்வாறு திரு. குமார் பொன்னம்பலம், "லங்காதீப" பத்திரிகையில் வெளிவந்த தமது பேட்டி பற்றி கருத்துத் தெரிவிக்கையில் கூறினார்.

'மஸாச்சுசெட்ஸ்' தீர்மானம் குறித்து திரு பொன்னம்பலம் நமது நிருபரிடம் தமது கருத்தைத் தெரிவிக்கையில் கூறியதாவது:

தமிழ்ஈழம் பற்றியோ அதற்கு ஆதரவு வழங்குவது பற்றியோ 'மஸாச்சுசெட்ஸ்' மாநில தீர்மானத்தில் எதுவும் குறிப்பிடப்படவில்லை. இலங்கைத் தமிழ்மக்களின் பிரச்னைகள் பற்றியே அத்தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இத் தீர்மானத்திற்கும் மஸாச்சுசெட்ஸ் மாநில கவர்னருக்கும் எது வித தொடர்புமில்லை.

'சோமவில்' என்ற தொகுதியின் மாநில சட்டசபை உறுப்பினரான திருமதி ஹெள, மாநில சட்டசபையில் இத் தீர்மானம் தொடர்பான பிரேரணையை கொண்டுவந்தார், அமெரிக்க ஈழம் தமிழ்ச்சங்கமும் 'சோமவில்' என்ற இடத்திலேயே உள்ளது. எனவேதான் அவர் பிரச்னையை சட்டசபைக்குக் கொண்டுவந்தார்.

அமெரிக்காவின் 50க்கு மேற்பட்ட மாநில அரசுகளில் ஒரு மாநிலம் மட்டும தீர்மானம் நிறைவேற்றி பிரயோசனமில்லை.

அதிகார பலம்பெற்ற ஜனாதிபதி திரு. ஜிம்மிகார்ட்டர், இலங்கை அரசுடன் தொடர்புகொள்ளக்கூடிய நிலைமையை யாராவது ஏற்படுத்தி இருந்தால் நாம் எல்லோரும் பெருமைப்படுவோம்.

அமெரிக்கா சென்ற தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் இலங்கைத் தமிழர் பிரச்னை குறித்து ஜனாதிபதி திரு. கார்ட்டரைச் சந்தித்து ஏன் பேச்சு நடத்தவில்லை

கீழ் மட்டத்தில் உள்ளவர்களுடன் பேச்சு நடத்தி என்ன பயன்''. (ம-இ)

## சாதிப்பிரச்னை தீவின்முழுத் தமிழர்களுக்கும் அவமானம்

### தமிழர் கூட்டணி தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

''கைதடிகிழக்கு பிள்ளையார் கோவில் தேர்த்திருவிழாவில் இடம்பெற்ற சாதிப்பிரச்னை இத்தீவின் முழுத்தமிழர்களுக்கும், அவமானத்தை விளைவிக்கும் செயலாகும் ''

இக்கண்டனத் தீர்மானம் தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைமைப்பணியகத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் நிறைவேற்றப்பட்டது. கருத்தரங்கிற்கு சட்டத்தரணி திரு. கரிகாலன் தலைமை தாங்கினார்.

தீர்மானத்தின் விபரம் வருமாறு:

''புனிதமான இந்து சமயத்தை மாசுபடுத்தும் முறையில் கைதடிகிழக்கு பிள்ளையார் கோவில் தேர்த்திருவிழாவிடயத்தில் சாதிச் சழக்கர்கள் மேற்கொண்டுள்ள அநீதியும் அட்டூழியமும் இத்தீவின் முழுத்தமிழ் இனத்திற்கும் அவமானத்தை விளைவிக்கும் செயல்கள் என்பதை இக்கருத்தரங்கு உணர்ந்து, இத்தகைய அநீதியையும், அக்கிரமத்தையும் உடன்கைவிடுமாறு சம்பந்தப்பட்டவர்களைக் கேட்டுக்கொள்வதுடன், சம்பந்தப் பட்டவர்களின் இனத்துரோக நடவடிக்கைகளை வன்மையாகக் கண்டிக்கிறது''

மேற்குறிப்பிட்டபிரிவினரின் மிலேச்சத்தனமான முயற்சியை உடனடியாக முறியடிக்கவும் பாரதூரமான இப்பிரச்னையின்பால் முழுத்தமிழ் மக்களினதும் கவனத்தை ஈர்க்கவும், இத்தகைய நச்சுப் போக்குகள் தமிழ் நிலத்தில் வளராது கருவறுக்கவும் வேண்டி, சாவகச்சேரித் தொகுதி அறப்போராட்டக் குழு பாரிய அளவில் உடனடியாக மேற்கொள்ளவிருக்கும் அறப்போராட்டத்திற்கு முழு ஆதரவையும் அளிப்பதெனவும் இக்கருத்தரங்கு மேலும் தீர்மானிக்கிறது. (கெ-இ)

## "சென்திரேசா வித்தியாலயத்தை மகாவித்தியாலயமாக தரமுயர்த்த முயல்வேன்"

### -- கிளிநொச்சி எம். பி.

(பரந்தன்)

''அண்மைக்காலத்தில் சிறுகுன்றியிருந்த சென்திரேசா வித்தியாலயம் தற்போது முன்னேற்றப்பாதையில் செல்கின்றது. இப் பாடசாலைக்குத் தேவையான கட்டிடங்கள் விடுதிச்சாலைகள் என்பன அமைத்து ஒரு மகளிர் மகாவித்தியாலயமாக தரமுயர்த்த முயற்சிப்பேன்''

இவ்வாறு கிளிநொச்சி சென்திரேசா மகளிர் வித்தியாலயத்திற்கு லட்ச ரூபா செலவில் கட்டப்படவுள்ள புதிய கட்டிடத்துக்கான அத்திபாரக்கல்லை நாட்டிவைத்து உரையாற்றிய கிளிநொச்சி எம் பி திரு வி ஆனந்தசங்கரி குறிப்பிட்டார்.

வித்தியாலய அதிபர் செல்வி ராதா சோமசுந்தரம் சமஸ்கிருத சுலோகங்கள் ஓதி மங்கள விழாவை ஆரம்பித்து வைத்தார்.

திரு ஆனந்தசங்கரி தொடர்ந்து பேசுகையில், இவ் வித்தியாலயத்திற்கு திருக்குடும்பக் கன்னியர்மடத்தைச் சேர்ந்த அதிபர் ஒருவரைப் பெற முயற்சித்து தோல்விகண்டபின்னரே தற்போதைய அதிபரின் உதவியை நாடினேன். அவர் பாடசாலையை முன்னேற்றப்பாதையில் இட்டுச் செல்கின்றார்'' என்றார். (கு)

# ரஷ்ய-சீன பேச்சுவார்த்தை விரைவில் ஆரம்பமாகும்

## மாஸ்கோவில் தேசாய் தகவல்

மாஸ்கோ, ஜூன். 13 ரஷ்ய-சீன நட்புறவுபேச்சு வார்த்தைகள் விரைவில் நடைபெறுமென்று இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் மாஸ்கோவில் தெரிவித்தார்.

சோவியத் யூனியனில் இரண்டுநாள் உத்தியோக பூர்வ நட்புறவு விஜயத்தை மேற்கொண்ட திரு. தேசாய் ரஷ்யஅதிபர் திரு. பிரஷ்னேவ் பிரதமர் திரு கொஸிஜின் ஆகியோருடன் பேச்சு நடத்திய பின்னரே மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்

அணிசேரா இயக்கம் வலுவடையவேண்டுமென்று சோவியத் யூனியன் விரும்புகிறதென்றும் திரு. தேசாய் தெரிவித்தார்.

ரஷ்யத் தலைவர்களுடன் தாம் நடத்திய பேச்சுவார்த்தைகள் திருப்திகரமாக அமைந்திருந்தது என்றும் பல சர்வதேசப் பிரச்னைகளும், இரு நாட்டு நட்புறவு குறித்தும் பேச்சுவார்த்தைகளின் போது விரிவாக ஆராயப்பட்டதென்றும் திரு. தேசாய் கூறினார்

(இ)

## விசேட நீதிமன்றத்தில் இந்திரா மீது வழக்கு

புதுடில்லி, ஜூன். 13 இந்தியாவில் நெருக்கடி நிலை அமுலிலிருந்தபோது வரம்பு மீறிய செயல்களில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் முன்னாள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி முன்னாள் செய்தி ஒலிபரப்பு அமைச்சர் திரு. சுக்ளா மற்றும் இருவர் மீது இன்று புதுடில்லி விசேட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

2-வது விசேட நீதிமன்றமான இதற்கு திரு. ஜெய்னி நீதிபதி.

(இ)

ஜனதாகட்சி நிர்வாகக் குழுவிலிருந்து

# ராஜ்நாராயண் வெளியேற்றம்

புதுடில்லி, ஜூன். 13 இந்திய முன்னாள் சுகாதார அமைச்சர் திரு. ராஜ்நாராயண் ஜனதாகட்சியின் தேசிய நிர்வாகக் குழுவிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

திரு. நாராயண்மீது சுமத்தப்பட்ட 8 புகார்களிலும் அவர் குற்றவாளியாகக் காணப்பட்டு நிர்வாகக் கமிட்டியிலிருந்து வெளியேற்றப்பட்டார் என கமிட்டியின் 'கொன்வீனர்' திரு. இரா. செழியன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அப்பீல் செய்ய திரு. நாராயணுக்கு 3 மாதகால அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது.

### நாராயண் கருத்து

என்மீது எடுக்கப்பட்ட அரசியல் பழிவாங்கலே அன்றி ஒழுங்கு நடவடிக்கை அல்ல என்றும் கட்சியிலிருந்துதடுத்து வைத்தாலும் என்னை மக்களிடமிருந்து எவரும் தடுத்து வைக்க முடியாது என்று இது குறித்து திரு. நாராயண் கருத்து தெரிவித்துள்ளார்.

## கால்களினால் விமானத்தை இயக்கி ஆங்கிலக் கால்வாயை கடந்தார்

### 26 வயது வாலிபரின் சாதனை

லண்டன், ஜூன், 13 கலிபோர்னிய விமானம் ஓட்டிஒருவர் காலால் இயக்கும் விமானம் ஒன்றின் மூலம் ஆங்கிலக்கால்வாயைக் கடந்துசென்று புதிய சாதனையை ஏற்படுத்தி உள்ளார்.

26வயதுடைய பிரயன் அலன் தாம் உருவாக்கிய 56 ருத்தல் விமானத்தில் பறந்தே இச்சாதனையை நிலைநாட்டினார்.

முழுக்க முழுக்க மனித சக்தியாலேயே இவ் விமானம் இயக்கப்பட்டது.

இச்சாதனைக்காக இவருக்கு 2 லட்சம் டாலர் பரிசாக வழங்கப்பட்டது

(இ)

## ஜோன்வைன் காலமானார்

லாஸ்ஏஞ்சல்ஸ், ஜூன் 13 பிரபல ஆங்கில நடிகர் ஜோன்வைன் நேற்று இரவு தமது 72வது வயதில் காலமானார்.

15 ஆண்டுகளாக புற்று நோயால் அவதிப்பட்டுவந்த இவர் 200 படங்களுக்கு மேல் நடித்துள்ளார்.

(இ)

## சங்கீத நடன இறுதிப்போட்டி

(யாழ்ப்பாணம்)

வடமாநிலப் பாடசாலைகளுக்கான சங்கீத, நடன, நாடக இறுதிப் போட்டிகள் இம் மாதம் பதினைந்காம் திகதி முதல் 18ம் திகதிவரை யாழ் இந்துமகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

(கெ-இ)

# பிரிட்டனில்பாவனைப்பொருள் பெற்றோல் விலை அதிகரிப்பு

## முதலாவது 'பட்ஜட்'டில் அரசசெலவினம் குறைக்கப்பட்டது

லண்டன், ஜூன். 13 பிரிட்டனில் புதிதாக ஆட்சிக்கு வந்துள்ள திருமதி மார்க்கிரெட் தட்சரின் கன்சர் வேடிவ்கட்சியின் முதலாவது வரவு செலவுத் திட்டத்தில் பல பாவனைப்பொருட்களின் விலைகள் அதிகரிக்கப் பட்டுள்ளன.

பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் நேற்று சமர்ப்பிக்கப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தில் அரசாங்க செலவினங்களும் வரிகளும் குறைக்கப் பட்டுள்ளன

ஒரு கலன் பெற்றோலின்விலை 10 பென்ஸால் அதிகரித்து தற்போது 7 பவுண் 8 பென்சாக விற்கப்படுகிறது.

(இ)

## காரைநகர் கொலைவழக்கு: சந்தேகநபர் விடுதலை

(ஊர்காவற்றுறை)

காரைநகர் பலுக்காடுவைச் சேர்ந்த வேலுப்பிள்ளை ஆறுமுகம் என்பவரின் கொலை தொடர்பாக சந்தேகத்தின் பேரில் காவலில் வைக்கப்பட்டிருந்த ஆசிரியர் தியாகராசா ஊர்காவற்றுறை நீதவான் திரு. ஜெகசோதியினால் விடுதலை செய்யப்பட்டார்.

கடந்த ஏப்ரல்மாதம் 26ம் திகதி படுகாயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு இறந்தவரான ஆறுமுகத்தின் மனைவி சம்பவதினம சந்தேகநபர் தியாகராசா தலது வீட்டில் நின்றதைக் கண்டதாக வாக்குமூலத்தில் தெரிவித்ததைத் தொடர்ந்து அவர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

நேற்று ஊர்காவற்றுறை நீதவான் திரு. ஜெகசோதி முன்னிலையில் விசாரணைக்கு எடுத்தபோது சட்டத்தரணி ந. சிறிகாந்தாவின் அனுசரணையுடன் சட்டத்தரணி திரு. த சோமசுந்தரம் ஆஜராகிவாதாடினார்.

சந்தேகநபர் கடந்த 46 தினங்களாக காவலில் வைக்கப்பட்டிருந்த போதிலும் ஊர்காவற்றுறைப் பொலிசார் கொலை சம்பவம் தொடர்பாக வேறு எவ்வித சாட்சியமும் சமர்ப்பிக்காததால் சந்தேகநபரை விடுதலை செய்யுமாறு சட்டத்தரணி சோமசுந்தரம் கோரியதைத்தொடர்ந்து நீதவான் சாட்சியங்கள் இல்லாததால் அவரை விடுதலை செய்தார்.

(கு)


## தேவருஜ் வேகநடையில் சாதனை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திரு. க. தேவருஜ் சுந்தரம் வேகநடையில் உலகசாதனையொன்றினை நிலைநாட்டியுள்ளார். இவர் மூன்றுதினங்களாக தொடர்ந்து 205 மைல்கள் நடந்துள்ளார்.

கடந்த எட்டாம் திகதி மாலை 6-02க்கு தமது சாதனை முயற்சியை ஆரம்பித்து 10ந் திகதி மாலை 6-02 தமது சாதனையை முடித்துக்கொண்டார். இவரது சாதனைமுயற்சி யாழ்ப்பாண விளையாட்டுக் கழக ஆதரவில் இடம்பெற்றது.

(கெ-இ)



Rio (Jaffna) Phone: 7607 Daily 10-30, 4-45, 7-00 & 9-30 p.m

New Adventure of Ilusive

வெஸ்லி
மானிப்பாய்
தினசரி 6-30, 9-30

சக்கரவர்த்தி திருமகன்

ராஜா (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
எம்.ஜி.ஆர் - ஜெயலலிதா
சௌகார் ஜானகி நடித்த
ஒளிவிளக்கு
புதிய பிரதி சனிமன்களர்

24-வது வாரம்
வின்சர் (கோன்டிராணை) போன் 406 தினசரி 4 காட்சிகள்
10-30, 2-00, 6-00, & 9-30
பைலட் பிரேம்நாத்
(சனிங்கள் கலர்)

2-வது ஜனத்திரள் வாரம்
நாளை நாளை என்று நாளைப் பின்போடாது
இன்றே கண்டு களிக்கத் தவறுதீர்கள்
ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்) தினசரி 10-30, 2-30, 6-15, 9-45
முத்துராமன் - தேவிகா
கல்யாணகுமார் நடித்த
நெஞ்சில் ஓர் ஆலயம்
குறிப்பு: யாழ்நகரில் இதுவே கடைசித்தடவை யாக காண்பிக்கப்படுகிறது.
(புதிய பிரதி)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) தினசரி 2-30, 6-30 & 9-45 சனி, ஞாயிறு 10-30, 2-30 6-30 & 9-45
ஜெய்சங்கர்
வைராக்கியம்

லிடோ (யாழ். நகர்) போன் 7891 தினசரி 4 காட்சிகள்
A. V. M. ராஜன்
நிறைகுடம்

A GRAND RELEASE !
SHANTHI JAFFNA Daily: 5 Shows
(Phone 7642) 10-30, 2-30, 4-45, 7-00, 9-30 P.M.
Peter Sellers, Christopher Plummer
in
"The Return Of The PINK PANTHER
Cinemascope — Colour
Robbery—Suspence—Comedy & Karate Fight
Ran over 100 days in Colombo

கடைசி சிலதினங்கள் மட்டும்
ராணி (யாழ் நகர்) தினசரி 4 காட்சிகள்
எஸ்.எஸ்.ஆர்.-ராஜசுலோஜனு-பாலையா
தேடிவந்த செல்வம்
(புதிய பிரதி)
அடுத்த வெளியீடு எம். ஜி. ஆர். நடித்த
உலகம் சுற்றும் வாலிபன்

REGAL Daily at 2-00. 4-30, 7-00 & 9-30 p. m. only
(Jaffna) Saturday & Sunday at 10-30 a.m.
URSULA ANDRESS
in
Mountain In The Jungle
Color — Scope — Adults
சிறுவர்கள் வயதுவந்தவர்களுடன் வந்தால் அனுமதிக்கப்படுவர்.

கடைசி வாரம் தினசரி 4 காட்சிகள்
மனோகரா (யாழ்நகர்) எம் ஜி. ஆர். - ராஜகுமாரி நடித்த
குலேபகாவலி
(புத்தம்புதிய பிரதி)


## கைதடியில் சாதிப்பிரச்னை இல்லை என்பது

# முழுப்பூசினியை சோற்றில் மறைக்கும் கதையாகும்

## 'சச்சி' கண்டனம்

(யாழ்ப்பாணம்)

கைதடியில் சாதிப்பிரச்னை இல்லை என்பது முழுப் பூசினிக்காயை சோற்றில் மறைக்கும் கதையாகும். கைதடியில் நடைபெறும் மனிதப் பண்பற்ற சம்பவங்கள் தமிழ்இனத்துக்கும் மனித நாகரீக வளர்ச்சிக்கும் புறம்பானவை

இவ்வாறு இலங்கை இந்து இளைஞர் பேரவையின் தலைமைச்செயலாளர் திரு க சச்சிதானந்தன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கைதடியில் சாதிப்பிரச்னை இல்லையென்று கூறப்படுகிறது. பின்வரும் விடயங்களைக் கவனித்தால் அதன் உண்மைநிலை என்பது தெரியும்

கைதடி கிழக்குப் பிள்ளையார் கோவிலில் சிறுபான்மையினர் தேர்வடம் பிடிக்கமுடியாது சுவாமியைத் தோளில் காவமுடியாது. அபிஷேகம், திருவிழா உபயம், பூசை உபயம்செய்யமுடியாது உயர் சாதியினர் மட்டுமே இவற்றைச் செய்யலாம்.

கைதடி கயிற்றகிட்டிக் கந்த சுவாமி கோவிலில் சிறுபான்மையினர் எவ்வித திருத் தொண்டுகளும் செய்யமுடியாது- திருத்தொண்டுசெய்ய முயன்றபோது கோவிலையே மூடிவைத்துள்ளார்.

கைதடிச் சந்தி வைரவர் கோவிலில் சிறுபான்மையினர் திருத்தொண்டு செய்யமுடியாது உபயம்செய்யமுடியாது.

கைதடியில் உள்ள சமாதான நீதவானொருவர் சிறுபான்மையினர் ஏதாவது பத்திரத்தில் கையெழுத்துக் கேட்டு வந்தால் அவர்களை வீட்டு முன் முற்றத்திற்கே வரவிடமாட்டார். வெளியில் வைத்தும் கையெழுத்துப் போட்டுக்கொடுத்து அனுப்புவார்.

உயர்சாதியினரின் சொந்த வீட்டுக்குக் கட்டை தறிக்கச் சிறுபான்மையினர் மறுத்த காரணமாக உயர்சாதியினர் ஒன்றுசேர்ந்து சிறுபான்மையினருக்கு வேறுவேலைகளை வழங்க மறுத்தனர். வளவுக்குள் வராது தடுத்தனர் படலைகளைப் பூட்டினர் மக்களைப் பட்டினி போட்டனர். இதனுல் சிறுபான்மையினரும் தோட்டங்களில் நீரிறைக்க மறுத்தனர். வேலைசெய்ய மறுத்தனர்.

கைதடியில் மொத்த மக்கள் தொகையில் 25 சதவீதமான உயர்சாதியினர் மொத்தக் காணிப் பரப்பில் 75 சதவீதமான காணிகளுக்கு உரிமையாளராக இருப்பதால் சிறுபான்மையினர் தொழிலுக்கு உயர்சாதியினரையே நம்பி உள்ளனர். சிறுபான்மையினர் காணியின்றி வீடுகளின்றி இருக்கின்றனர்.

உயர்சாதியினரின் சொந்த வீடுகளுக்குப் போகாவிடில் சிறுபான்மையினர் மறைமுகமாகத் தண்டிக்கப்படுவார்கள் - உயர்சாதியினரோ சிறுபான்மை இனத்தவர் இறந்தால் எட்டியும் பார்க்கமாட்டார்கள்.

சிறுபான்மையினர், உயர்சாதியினரின் கொடுமைகளையும் அட்டூழியங்களையும் தாங்காமல், பொங்கி எழும்வேளையிலே இவர்களுள் ஒருசிலர் வன்முறையில் ஈடுபட்டு உயர்சாதியினர் தோட்டங்களை அழித்துள்ளனர். ஆடுமாடுகளைப் பிடித்துள்ளனர் அழிவுகளை ஏற்படுத்தி உள்ளனர். இதைக்குரிய கட்டைகளை முதலிலே எரித்ததைபோன்ற அநியாயங்கள் செய்துள்ளனர். [illegible]

உயர்சாதியினரும் சிறுபான்மையினரின் தொழில்களை நசுக்க தென்னம் பனைப் பாளைகளை வெட்டியுள்ளனர்.

கைதடிச் சந்தியில் உள்ள கடைகளிலும் கிராமப்புற இடங்களில் உள்ள கடைகளிலும் ஒரு சாதியினரின் கடைகட்கு மற்றச்சாதியினர் போகமாட்டார்கள். ஒரு சாதியினர் விற்கும் பொருட்களை மற்றச்சாதியினர் வாங்கமாட்டார்கள்- கள்ளுக் குடிப்பதற்கு மட்டும் எல்லாச் சாதியினரும் ஒரு கொட்டிலுக்குப் போகின்றார்கள்.

இவைதான் கைதடியில் சாதியின் பெயரால் நடைபெறும் அநியாயங்கள், அட்டூழியங்கள். யாழ்குடாநாடு ஒருபானை சோறு எனின் கைதடி அதில் ஒருசோறு-

சுயவிளம்பர விரும்பிகள் கைதடிக்கு வரமாட்டார்கள். உயிரையும் பெயரையும் மானத்தையும் மதிப்பையும் மரியாதையும் இழக்கவிரும்பும் தியாகிகள் மட்டுமே அறப் போராட்டத்திற்காகக் கைதடிக்கு வருவார்கள். [இ]

## இன்றைய பலன்

வைகாசிமாதம் 31-ம் திகதி

(வியாழக்கிழமை)

(14-6-1979)

மேடம்: வாகன விருத்தியுடன் இல்லத்தில் திருப்தி காணுவீ, முன்னேற வழியும் தோன்றும்.

இடபம்: செய்தொழிலால சிறப்புக் கிடைக்கும், வழக்கு விவகாரங்களில் வெற்றியுண்டு, வெளியிடத்திலிருந்து மகிழ்ச்சியைத் தேடித் தரும் செய்தியும் கிடைக்கும்.

மிதுனம்: பகைமூட்டம் தோன்றும், பதட்டம் உடன் சேரும், மிகையான போக்கினுலே மனதும் பாழாய்ப் போகும்,

கடகம்: வெளியிடத் தொடர்புகளில் மந்தநிலை தென்படும், திடீர் பிரயாணத்திற்கும் இடம் உண்டு, சுகாதாரம் வேண்டும்.

சிங்கம்: ஆதரவு கொடுத்தவரே முதலில் கையை விரிக்கக்கூடும், கடன் தொல்லை அதிகரிக்கலாம், நிதானம் வேண்டும்.

கன்னி: பெரியவர் ஒருவரின் ஆதரவு கிடைக்கும், தெய்வத்தின் அருளும் வேண்டும்.

துலாம்: சுற்றதனுல் பயன் இன்று கட்டாயம் கிட்டும், அறிஞர்கள் போற்றுவர் ஆதரவும் கிடைக்கும்.

விருச்சிகம்: அதிர்ஷ்ட தேவதையின் அணைப்பு உங்களுக்குக் கிடைக்கலாம், திரைப் படத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு உற்சாகமளிக்கக்கூடும், செல்வாக்குள்ள ஒருவரின் ஆதரவும் தப்பாமல் உண்டு.

தனுசு: உறவுமுறையில் வெடிப்பு ஏற்படும், பண விவகாரத்தின் மூலம் பகை தோன்றலாம், தொழில் துறையில் அதிக கவனம் செலுத்தவும்.

மகரம்: தொழில் புரியும் இடத்தில் கருத்து வேற்றுமைகள் தோன்றக்கூடும், கொடுக்கல் வாங்கல்மூலம் எதிரிகளைத் தேடிக்கொள்வீர்கள், பொருள் விடயத்தில் கவனம் செலுத்தவும்.

கும்பம்: இல்லத்தில் இனிமையான நிகழ்ச்சிகள் இடம்பெறும், இனபந்துக்கள் உங்களை உற்சாகப்படுத்துவார்கள், நீண்டநாள் பூமிப் பிணக்கு இன்று நிவர்த்தியாகும், தானியவிருத்திக்கும் இடமுண்டு

மீனம்: குடும்பத்தில் சிறுபூசல் தலைதூக்கும், பெரியவர் ஒருவருடன் அபிப்பிராயபேதம் தோன்றக்கூடும். ஆத்திர உணர்ச்சியால் மோதல்கள் ஏற்படும், அமைதியுடன் இருக்கவும்

சோதிடக்கலாநிதி

திருமலை க. வேலுப்பிள்ளை


நாகம்ஸ் (சுன்னுகம்)
தினசரி 6-30, 9 30
சனி, ஞாயிறு 2-30
ஜெமினி - சிவாஜி
உனக்காக நான்


## சங்கத்தானையில் பாராட்டுவிழா

(சாவகச்சேரி)

நாதஸ்வர வித்துவான் வ. பஞ்சாபிகேசன் தவில் வித்துவான் மு நடராசசுந்தரம் ஆகியோரின் நீண்டகால சேவையைப் பாராட்டி சங்கத்தானை சனசமூக நிலையத்தின் ஆதரவில் இம்மாதம் 16-ம் திகதி சங்கத்தானை வைரவ கந்தசாமி கோவில் முன்றலில் ஒரு பாராட்டு விழா நடைபெறவிருக்கிறது [ஈ]

## கிளைக்குழு உறுப்பினர்

தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவு சங்க கொடிகாமம் கிளைக்குழு தேர்தலில் போட்டியிட்ட 13 பேரில் பின்வரும் 9 பேர் உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டனர் இருவாளர்கள் பி. பிரேமானந்தன் 241, கா யோகநாதன் 236, க சிவஞானசுந்தரம் 235, சி. சுந்தரலிங்கம் 224, க. செல்லத்துரை 222, க. குணச்செல்வம் 221 ஆ. வேலாயுதபிள்ளை 220, செ. ஜெயசேகரம் 219, செ. சின்னப்பு 209

## பிரிவுபசாரம்

(யாழ்ப்பாணம்)

யாழ் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி சாதாரணபிரிவுமாணவர்களின் பிரிவுபசாரவைபவம் கடந்த வெள்ளிக்கிழமை மாலை, மாணவர் மன்றத் தலைவர் திரு. தி யோகநாதன் தலைமையில் நடைபெற்றது. வைபவத்தில் கல்லூரி பொறுப்பதிகாரி, விரிவுரையாளர்கள், கூட்டுறவு ஊழியர்களுடன் கூட்டுறவு தேசிய சேவை ஊழியர் யாழ் கிளை உறுப்பினரும் கலந்துகொண்டனர் (செ-இ)

## கறுப்புப்பட்டி இயக்கம்

# ஒடுக்கப்பட்ட மக்களுக்கு எதிரான நடவடிக்கையாம்

(யாழ்ப்பாணம்)

கறுப்புப்பட்டி இயக்கம் நடாத்தி முற்படும் அறப் போராட்டக் குழுவினரும் ஏனைய சிலரும் எடுக்கும் முயற்சிகள் யாவும் சகல ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் எதிராக ஓர் பரந்த அரசியல் பின்னணியோடு நடைபெறுவதையே எம்மால் உணரமுடிகிறது

தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்க செயலாளர் திரு. கே. சுப்பையா வெளியிட்டுள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

சாதியின் பெயரால் ஸ்தாபனங்கள் அமைத்து பிழைப்பு நடத்துபவர்கள் என்று பகிரங்கமாக எம்மீது குற்றம் சுமத்துபவர்கள் இப்படியான ஸ்தாபனங்கள் இல்லாவிடில் இந்த மக்கள்மேல் மிகவும் காட்டுமிராண்டித்தனமான நிலையை தொடர்ந்தும் மேற்கொள்ளலாம் என எண்ணுகின்றனர். இந்த அவமதிப்பு மேலும் பிரச்சினைகளை உக்கிரப்படுத்தும் முயற்சியேயன்றிவேறொன்றுமல்ல.

சாதியின் பெயரால் பட்டாளங்களைத் திரட்டி வெற்றிகளைப் பெறமுடியாது என்று கூறும் தலைவர்களிடம் ஒருவிஷயத்தைக் கேட்பது அவசியமாகிறது. 1947ம் ஆண்டில் இருந்து இன்றுவரை இனத்தின் பெயரால், நீங்கள் திரட்டிவந்த படைகளினால் ஒரு அங்குலம் கூட இனப்பிரச்சினையில் வெற்றிகாண முடிந்ததா? கூலிப்படைகள் என ஒடுக்கப்பட்ட மக்கள்மேல் சுமத்தும் குற்றச்சாட்டை வெகுஜன இயக்கம் வன்மையாகக் கண்டிக்கின்றது அதேசமயம் கறுப்புப்பட்டி இயக்கம் அடிப்படையில் ஒடுக்கப்பட்ட மக்களுக்கெதிரானது என்பது வெளிப்படையாக உள்ளது. எனவே சகல ஒடுக்கப்பட்ட மக்களும் ஒரே அணியில் திரண்டு நின்று, எமது மனித உரிமைகளை நிலைநாட்ட முன்வரவேண்டும்.

## திருக்குறள் கழகம் பூரண ஆதரவு

(யாழ்ப்பாணம்)

அறப்போராட்டக் கழகம் நடத்தும் கறுப்புப்பட்டி இயக்கத்துக்கும் உண்ணாவிரதப் போராட்டத்துக்கும் திருக்குறள் முன்னணிக் கழகம் தனது பூரண ஆதரவை வழங்கியிருப்பதாக அக்கழகத்தின் பிரமுகரான திரு. வண்ணை ஆனந்தன் கூறினார்.

கறுப்புப்பட்டி இயக்கத்திலும், உண்ணாவிரதத்திலும் கலந்துகொண்டு இயக்கம் வெற்றிபெற உழைக்கும்படி யாழ்ப்பாணத்திலுள்ள பாடசாலை மாணவர்களை நேரில் சந்தித்துக் கழகம் கோரிக்கை விடுத்துவருவதாகவும் குறித்த தினத்தில் கறுப்புக்கொடிகளை பறக்கவிட்டு ஆதரவு காட்டும்படி யாழ் வர்த்தகர்களைக் கோரியிருப்பதாகவும் திரு. வண்ணை ஆனந்தன் கூறினார்.

## சாதியின்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

17ந் திகதி ஞாயிற்றுக்கிழமை நடத்தும் உண்ணாவிரதச் சத்தியாக்கிரகத்திலும் கலந்து ஆதரவளிக்குமாறு பொதுமக்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

"தமிழர் ஒற்றுமை மூலமே தமிழர் விடுதலைப் பாதையை நோக்கி முன்னேறமுடியும்."

### மகளிர் பேரவை கோரிக்கை

சாவகச்சேரித் தொகுதி அறவழிப் போராட்டக் குழுவின் வேண்டுகோளுக்கமைய நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவிருக்கும் கறுப்புப்பட்டி இயக்கத்தில் தமிழ் மாணவிகள், பெண் ஊழியர்கள் மற்றும் மகளிர் அனைவரும் பங்குபற்றிச் சாதி ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு முழுமையான ஆதரவை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன் என்று மகளிர் பேரவைச் செயலாளர் திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் விடுத்துள்ள செய்தியில் குறிப்பிட்டுள்ளார்

"பெண்கள்தான் உண்மையான சமுதாய மறுமலர்ச்சியை ஏற்படுத்தமுடியும். எனவே மக்கள் அனைவரும் சகோதரர்கள் என்ற உயர்ந்த நோக்கத்தைக் கைக்கொள்ள வேண்டும்,

கைதடியில், அறவழிப் போராட்டக்குழு நடத்தும் உண்ணாவிரதச் சத்தியாக்கிரகத்திலும் பங்குகொண்டு சாதி ஒழிப்பில் ஈடுபட்டுத் தமிழ் மக்களின் உண்மையான விடுதலைக்கு உழைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்" என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். [செ]

## மறைமுகமான ஆதரவு?

கைதடி சைவ அநாதை இல்லப்பொறுப்பாளரும்சமாதான நீதவானுமாகிய திரு கந்தையாவின் அறிக்கை சாதிப் பிரச்சினையை நிலைநாட்ட விரும்புபவர்களுக்கு மறைமுகமான ஆதரவாக அமைந்துள்ளது என சமூகக் குறைபாடுகள் ஒழிப்புக்குழு செயலாளர் திரு. சு. நடராசா ஓர் அறிக்கையில் கூறியுள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது!

இச்சந்தர்ப்பத்தில் இரு சமுகத்தினராலும் வேறுசூழ்நிலையில் நடத்தப்பட்ட களவுச் சம்பவங்களை இப்பிரச்சனையுடன் சம்பந்தப்படுத்துவது ஒடுக்கப்பட்ட மக்களை மேலும் அவமதிக்கும் செயலாகும். சமத்துவத்துக்காக போராடிய மக்களை வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புபடுத்தி ஒரே நேரத்தில் பல ஜீப் வண்டிகளில் பொலிசாரால் அக்கிராமத்தை 'முற்றுகை'யிட வைத்துள்ளனர். அநியாயமாக 3இளைஞர்கள் தாக்கப்பட்டதை தவறான அறிக்கைகள் மூலம் சமத்துவத்துக்காகப் போராடும் மக்களைத் திசைதிருப்புவது திரு. கந்தையாவுக்கு உகந்த செயலல்ல. தமது சமூகத்தினரால் இழைக்கப்பட்ட அநீதியை இதுவரை அவர் கண்டிக்கவில்லை. எமது அனுபவத்தைப் பொறுத்தமட்டில் ஆலயப்பிரவேசம் போன்ற சமத்துவ முயற்சிகளில் நேரடியாகப் பங்குகொள்ளாமல்வெறுமனே ஆதரவாகப்பேசிவிட்டு ஒதுங்குபவர்களைவிட, சாதிஒழிப்பை எதிர்ப்பவர்கள் மேலானவர்களெனக்கருதுகின்றோம். ஏனெனில் அவர்களை நாம் இலகுவில் இனங்கண்டுவிடுகிறோம்.

சாதியின் பெயரால் நடக்கும் அடக்குமுறைகளையும் அநியாயங்களையும் தமிழ்பெரியார்களும், இளைஞர்களும் இச்சந்தர்ப்பத்திலாவது தீர்க்கமுற்படாவிட்டால் இதனால் ஏற்படும் முழுத்தமிழினத்துக்கும் அழிவாக அமைந்துவிடுமோ என அஞ்சவேண்டியுள்ளது. கறுப்புப்பட்டிப் போராட்டத்துடன் நில்லாமல் தொகுதிரீதியாக உடனடியாக செயலில் இறங்கும்படி இளைஞர்களை அழைக்கின்றேன்.

## பாராட்டு

[பண்டத்தரிப்பு]

யாழ். மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்திய சாலைகளுக்கும் மற்றும் சுகாதார நிறுவனங்களுக்கும் யாழ் மாவட்ட சுகாதார சேவை அத்தியட்சகர் அலுவலகம் தமிழ்மொழியில் சுற்றுநிருபங்களையும், கடிதங்களையும் அனுப்பஆரம்பித்துள்ளதை யாழ். மாவட்ட அரசாங்க மருந்தக்கலவையாளர்கள் சங்கக்கிளை பாராட்டியுள்ளது.

இதுதொடர்பாக சங்கச் செயலாளர் திரு. நா. மா. கந்தசாமி யாழ். மாவட்ட சுகாதார சேவை அத்தியட்சகருக்கு அனுப்பிவைத்துள்ள பாராட்டுக் கடிதத்தில்,

"வடகிழக்கு மாகாணங்களிலுள்ள அரசாங்க திணைக்களங்கள் தமிழ் மொழியில் கடமையாற்ற இன்றைய அரசு நடவடிக்கை எடுத்துவரும் இந்நேரத்தில் தங்கள் அலுவலகத்தினர் தமிழ்மொழியில் சுற்று நிருபங்களை வெளியிட ஆரம்பித்துள்ளதைவரவேற்பதுடன் தொடர்ந்தும் சுற்று நிருபங்களையும் கடிதங்களையும் தமிழ்மொழியிலே வெளியிடச் செய்யுமாறு வேண்டுகின்றோம்" என்று குறிப்பிட்டுள்ளார். [கு]

## 'உதகமண்ட்' உதகமண்டலமானது!

சென்னை, ஜூன். 13

தமிழ்நாட்டில் இதுவரை 'உதகமண்ட்' என்று அழைக்கப்பட்டுவந்த மலைப்பகுதி 'உதகமண்டலம்' என பெயர் மாற்றப்பட்டுள்ளதாக தமிழக அரசு உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளது. [இ]

## இயக்கத்துக்கு எதிர்ப்பு

(யாழ்ப்பாணம்)

இந்து இளைஞர் இயக்கமும் சாவகச்சேரித் தொகுதி அறங்காவல் குழுவினரும் மேற்கொள்ள முனைந்திருக்கும் கறுப்புப்பட்டிப் போராட்டத்தையும், உண்ணாவிரத இயக்கத்தையும் இலங்கை தெங்கு பனம் பொருள் உற்பத்திக் கூட்டுறவு பொது ஊழியர் சங்கம் கண்டித்துள்ளது.

சங்கச்செயலாளர் விடுத்துள்ள அறிக்கையில்

கைதடி பிள்ளையார் கோவிலைச்சுற்றியுள்ள ஒடுக்கப்பட்ட மக்கள் தேர்வடத்தைப் பிடித்திழுக்க முற்பட்ட சமயம் ஆலய பரிபாலகர்கள் அவர்களை பலவந்தமாகத் தடுத்து, அம்மக்களின் மனித உரிமைகளை மூர்க்கத்தனமாக மறுத்து நிற்பதனை எமது சங்கம் மிக வன்மையாகக் கண்டிக்கின்றது.

இந்து இளைஞர் இயக்கமும் சாவகச்சேரித் தொகுதி அறங்காவல் குழுவினரும் இன்னும் தமிழ்மக்கள் மத்தியில் இத்தகைய கீழ்த்தரமான நடவடிக்கைகளை மேற்கொள்ள முனைந்திருக்கும் ஆலயபரிபாலகர்களுக்கெதிராக அறப்போராட்டம் நடாத்த முன்வராமல் மேலெழுந்தவாரியாக பலாத்காரத்திற்கும், அனைத்திற்காகவும் என்னும் போலிநியாயங்களை முன்வைத்து கறுப்புப்பட்டி இயக்கமும், உண்ணாவிரதமும் நடத்த முனைந்து நிற்பதனை பலமாகக் கண்டிப்பதோடு, இப்பிரச்சினைகளுக்கு மூலகாரணமாக அமைந்த கைதடி பிள்ளையார் கோவில் பரிபாலகர்களை நேரடியாக 'கண்டிப்பதற்கும், ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளை வழங்குமாறு நேரடியாக வேண்டுகோள் விடுப்பதற்கும் முன்வராமல் சுற்றிவளைத்து பிரச்சினைகளைப் பூசி மெழுக முற்படுவது எமக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கின்றது.

இதேசமயம் மறுக்கப்பட்ட தமது உரிமைகளை நிலைநாட்ட கைதடி வாழ் மக்கள் மேற்கொள்ளும் நியாயமான போராட்டங்களுக்கு எமது சங்கத்தின் பரிபூரணமான ஆதரவு என்றும் உண்டு என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றோம். [க]

## செந்தமிழர் மாணவர் குழு ஆதரவு

(யாழ்ப்பாணம்)

செந்தமிழர் இயக்க மாணவர் அணி அமைப்புக் குழு கைதடியில் நடைபெற்ற சாதி பிரச்சினைகளுக்கு கண்டனம் தெரிவித்துள்ளது.

சாதிக்கொடுமைகள் தொடரும்வரை தமிழ் தேசிய இனத்தின் அடிமைநிலையும் தொடர் காவியமாகவே இருக்கும் என்பதை மாணவ சமூகம் தெளிவாக உணர்ந்துகொள்ளவேண்டும் என்று அமைப்புக் குழு கருத்து வெளியிட்டுள்ளது.

அறப்போராட்டக்குழு 15ம் திகதி நடாத்தும் கறுப்புப்பட்டி இயக்கத்திற்கு மாணவர்கள் அனைவரும் கறுப்புப்பட்டி அணிந்து கைதடியில் நடைபெற்ற மனிதாபிமானமற்ற செயல்களுக்குத் தம் எதிர்ப்பையும் துயரத்தையும் வெளிப்படுத்துமாறு கேட்டுக்கொண்டுள்ளதுடன் 17ந்திகதி கைதடியில் நடைபெறும் அடையாள உண்ணாவிரதத்தில் யாழ் மாவட்டத்திலுள்ள அனைத்துக்கல்லூரி மாணவர்களின் பிரதிநிதிகள் பங்குபற்றி தங்கள் தார்மீக கடமையை நிறைவேற்றுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

## செங்கலடி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நீதிபதி: நீங்கள் காசாளரிடம் கேட்டீர்களா?-இல்லை.

நீதிபதி: எப்படி தெரியும்?-மனேச்சரைக் கேட்டோம். 2 சைக்கிலில் சென்றோம். ராமநாயக்காமுன்னுக்கு சென்றார் நான் பின்னும் சென்றேன்.

காசாளர் கணேசலிங்கம், சைக்கிலில் சென்றார். துணையாக மற்றொருவர் சென்றார். அந்தநேரம் பையை அடையாளம் கண்டேன்.

ஏறூவூர் செங்கலடி குறுக்கு ரோட்டுசந்திக்கு அருகில் வங்கியிலிருந்து அரைமைக்லுக்கப்பால் சாந்திநியேட்டருக்குமுன்னால் கார் ஒன்று நிறுத்தப்பட்டிருந்தது. 3 இளைஞர்கள் அந்தக்காரில் சாய்ந்தபடி நின்றார்கள். 2 சிறி 8565 அந்தக் காரின் இலக்கமாகும். கணேசலிங்கம் காரின் வலதுபக்கமாகச் சென்றார். மற்றவர் இடதுபக்கமாக சென்றார், கார் வாழைச்சேனையை நோக்கி நின்று கொண்டிருந்தது

எதிரிபரமதேவா துப்பாக்கியை காட்டி, பணப் பையை எடுத்தார்.

எதிரிசார்பில் சட்டத்தரணி எம். சிவசிதம்பரம் ஆஜரானார். (ம)

## டட்லி ஞாபகார்த்த முத்திரை

[கொழும்பு]

முன்னாள் பிரதமர் காலஞ்சென்ற டட்லி சேனநாயக்காவின் ஞாபகார்த்தமாக முத்திரை ஒன்று வெளியிடப்படவுள்ளது.

1 ரூபா 25 சதம் பெறுமதியான முத்திரையை இம்மாதம் 19ம் திகதி காலை 9 மணிக்கு பிரதம தபால் நிலயத்தில மின்சக்தி, நெடுஞ்சாலைகள், தபால்தந்தித் தொடர்புகள் அமைச்சர் திரு டி. பி. விஜயதுங்கா வெளியிட்டுவைப்பார். [கு]

## பெற்றோலிய...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றோலியப் பொருட்களின் விரயத்தைக் கட்டுப்படுத்துவதற்காகச் சில சிக்கன நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. இதன்படி ஜூலை மாதம் தொடக்கம் பெற்றோல் நிலையங்கள் சனி, ஞாயிறு தினங்களில் மூடப்பட்டிருக்கும்.

அரசாங்க உத்தியோகத்தர்கள் தனிப்பட்ட விஷயங்களுக்காக அரச வாகனங்களில் பயணஞ்செய்வதும் தவிர்க்கப்படும்

பெற்றோலியப் பொருட்கள் விலையேற்றத்தினால் பஸ் ரயில் கட்டணம் உயர்த்தப்படமாட்டாதென உயர் அதிகாரி ஒருவர் கூறினார். [ம]

## 4 இளைஞர்கள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சாருக்குக் கொடுக்கப்பட்ட தகவலைத் தொடர்ந்து முல்லைத்தீவுப் பொலிசார் அமிர்தலிங்கம், செல்வரத்தினம் ஆகிய இருவரையும் முல்லைத்தீவிலும், இருவர் வேறிடங்களிலும் வைத்துக் கைது செய்தனர். [கொ]

## நன்றி நவிலல்

25-5-79ல் சிவபதமடைந்த எனது தாயார் திருமதி அன்னம் சின்னத்துரை அவர்களின் இறுதிச் சடங்குகளில் கலந்துகொண்ட, அனுதாபச் செய்திகள் அனுப்பிய நண்பர்கள் உறவினர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

டாக்டர் இ. கணேசையா

குரும்பசிட்டி. 2748

## மரண அறிவித்தல்

### குமரையா கந்தையாபிள்ளை

ஊரெழுவைச் சேர்ந்த இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர் கு கந்தையாபிள்ளை காலமானார். இவர், கமலேஸ்வரியின் அன்புக் கணவரும், விக்னபிரபா (U. K.), சந்திரபிரபா பிரபாகரன் (போப்பங் கம்பனி, கொழும்பு), இருபாகரன், விவாகரன், சிநேகப்பிரபா ஆகியோரின் தந்தையும், ஜெயரஞம் (U. K), காரசளமூர்த்தி (தொலைபேசித் தொடர்பு இணைப்பதிகாரி, கொழும்பு) ஆகியோரின் மாமனுருமாவார். அன்னாரது ஈமக்கிரிகைகள் இன்று, (14-06-79) வியாழக்கிழமை மாலை 3-60 மணிக்கு ஊரெழுவில் நடைபெறும். 2757

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் மேற்கு வீதி 68ம் இலக்க அச்சகத்தில் 1979-ம் ஆண்டு ஜூன் மாதம் 14-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No QB/8945/78 The Eelanaadu P B No 49, Telegram: Eelanaadu T. Ph 389.